17.02.2025 எம்.சி.ஓ.பி. எண். 159/2016 ம.சா.1 லட்சுமி

<u>குறுக்கு விசாரணை</u>

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. விபத்தில் இறந்துபோன கிருபாகரன் என்னுடைய மகன். விபத்து நடந்த அன்று என்னுடைய மகன் இனோவா கார் ஓட்டிசென்றார். என் மகன் ஓட்டிசென்ற கார் என் கணவர் பெயரில் உள்ளது, அந்த கார் எங்களுக்கு சொந்தமானது. ஆற்காட்டிலிருந்து பாண்டிச்சேரி செல்ல எங்களுக்கு சொந்தமான இனோவா காரை என் மகன் ஓட்ட காரில் அவருடன் சேர்த்து 9 நபர்கள் சென்றார்கள். ஆற்காடு-செய்யாறு சாலையில் பூதேரி புல்லவாக்கம் அங்காளம்மன் பெட்ரோல் பங்க் அருகில் டயர் வெடித்து விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். என்னுடைய மகன் காரை அதிவேகமாக ஓட்டிசென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் குற்றவாளியாக இனோவா கார் ஓட்டுநர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் விபத்து என்னுடைய மகனின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல.தீங்கிழைத்தவர் என்னுடைய மகன் தான் என்றும் அதனால் காப்பீடு விதிமுறைகளின் படி 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல. என் மகனுக்கு செல்லக்கூடிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் அதனால் காப்பீடு விதிமீறல் நடந்துள்ளது என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல.எங்களுக்கு சொந்தமான வாகனத்தில் ஓட்டுநருடன் சேர்த்து 8 பேர் தான் செல்லவேண்டும் என்றும் 9 பேர் சென்றுள்ளதால் காப்பீடுவிதிமீறல் நடந்துள்ளது என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல.என்னுடைய மகன் ரஷ்யாவில் மருத்துவ படிப்பு படித்து வந்தார்.என்னுடைய மகன் ரஷ்யாவில் மருத்துவ படிப்புபடித்துவந்தார்என்பதற்குஆதாரம்தாக்கல்செய்யவில்லைஎன்றால் இருக்கிறது.என்மகன் ரஷ்யாவில்மருத்துவபடிப்புபடித்துவந்ததாக வழக்கிற்காக

தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய மகனின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்றும் இந்த வழக்கு விபத்தை பொறுத்தவரை என் மகன் தான் தீங்கிழைத்தவர் என்றும் அதனால் இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.